வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 54/2022

வழக்கு சாட்சி LW8 /PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகுமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | திருவேங்கடம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 43 |

தேதி 19.03.2025

எதிரிகள் ஆஜர்

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் எடப்பாளையம் பகுதியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு தெரிந்த சர்வலிங்கம் என்பவர் மாத சீட்டு குணசேகரம் மற்றும் பிரகாஷ் என்பவரிடம் 2014ல் இருந்துகட்டிவந்திருந்தார். என்னையும் சீட்டு பணம் கட்டசொல்லி வற்புறுத்தினார். ஆனால் நான் கட்டவில்லை. ஆனால் அவர் சுமார் 8 ½ லட்சம் வரை குணசேகரனிடம் சீட்டு கட்டி ஏமாந்து விட்டார். 2014–2016 வரை சீட்டு கட்டி வந்தார். நான் கடை வைத்து பிழைத்து வந்தேன். அப்போது சீட்டு கட்டி வந்த ரசீதுகளை சர்வலிங்கம் அப்பப்போது என்னிடம் காண்பித்து செல்வார். பணம் தராத காரணத்தினால் சர்வலிங்கம், குணசேகரன்,பிரகாஷ், ராணி ஆகியோர்கள் மீது புகார் அளித்தார். போலீசார் மேற்படி சம்பவ குறித்து என்னிடம் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

சர்வலிங்கத்திற்கும் எனக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 20 வருடங்களாக பழக்கம். சீட்டில் என்னை சேர்வதற்கு சர்வலிங்கம் தான்அழைத்தார் என்றால் ஆமாம். குணசேகரன் அழைக்கவில்லை என்றால் ஆமாம். நான் எதிரி ஏலம் நடத்தியதை பார்த்தேனா என்றால் இல்லை. பணம் கொடுக்கும்போது பார்த்தேன். சர்வலிங்கம் கூறிதான் எனக்கு பணம் கொடுத்தது தெரியும் என்றால் ஆமாம். நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். சர்வலிங்கம் என்னை காவல் நிலையம் அழைத்து சென்றாரா என்றால் இல்லை. போலீசார் என்னை புகாரில் அழைத்து விசாரணை செய்தார்கள். எனக்கும், சர்வலிங்கத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1½ கிலோ மீட்டர். சர்வலிங்கத்திற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.